# பாதுகாப்பு அமைச்சு
# தேசிய கட்டிட ஆராய்ச்சி நிறுவனம் (NBRO)
# வெற்றிடங்கள்

தேசிய கட்டிட ஆராய்ச்சி நிறுவனத்திலுள்ள பின்வரும் பதவிகளுக்காக இலங்கைப் பிரஜைகளிடமிருந்து இத்தால் விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

(1) முகாமைத்துவ உதவியாளர் (தொழில்நுட்பம்) - சிவில் MA 2-2, தரம் iii (04 பதவிகள்)

**வெளிவாரி**

**தகைமைகள்:**

மூன்றாம் நிலை மற்றும் தொழிற்கல்வி ஆணைக்குழுவினால் ஏற்றுக்கொள்ளப்படும் மூன்றாம் நிலை தொழில்நுட்பம் / தொழிற்பயிற்சி நிறுவனத்தினால் வழங்கப்படும் தேசிய தொழிற் தகைமையில் 5ஆம் நிலைக்குக் குறையாத தேர்ச்சிச் சான்றிதழைப் பெற்றிருத்தல் அல்லது அரசாங்க தொழில்நுட்பக் கல்லூரியின் தொழில்நுட்பவியலில் தேசிய சான்றிதழைப் (NCT) பெற்றிருத்தல் அல்லது அதற்குச் சமமான தகைமை.

இயைபுடைய துறையில் குறைந்தபட்சம் 03 வருட கால அனுபவம் அனுகூலமாகும்.

(2) சாரதி, PL-3, தரம் iii (02 பதவிகள்)

**வெளிவாரி**

**தகைமைகள்:**

க.பொ.த (சா/த) பரீட்சையில் குறைந்தபட்சம் இரண்டு அமர்வுகளில் இரண்டு (02) திறமைச் சித்திகளுடன் ஆறு (06) பாடங்களில் சித்தியடைந்திருத்தல் வேண்டும்.

மற்றும்

மோட்டார் போக்குவரத்து திணைக்கள ஆணையாளர் நாயகத்தினால் வழங்கப்பட்ட சாரதி உரிமத்தைப் பெற்றிருத்தல் வேண்டும் மற்றும் சாரதி உரிமத்தைப் பெற்றுக்கொண்டதன் பின் வாகனம் செலுத்துதலில் குறைந்தபட்சம் மூன்று (03) வருடகால அனுபவம்.

**பொதுவான நிபந்தனைகள்:**

**சம்பள அளவு:**

முகாமைத்துவ உதவியாளர் (தொழில்நுட்பம்) - சிவில் MA 2-2, தரம் iii

ரூபா 30,310 - 300x10 - 350x7 - 600x4 - 710x20 - 52,360.00

சாரதி - PL-3, தரம் iii

ரூபா 26,290 - 270x10 - 300x10 - 330x10 - 350x12 - 39,490.00
(சம்பள அளவின் ஆரம்ப நிலை)

**வயதெல்லை:**

- 18 வயதிற்குக் குறையாமலும் 45 வயதிற்கு மேற்படாமலும் இருக்க வேண்டும்.
- உள்வாரி விண்ணப்பதாரிகளுக்கு உச்ச வயதெல்லை ஏற்புடையதல்ல.
- உள்வாரி தகைமைகளின் பிரகாரம் உள்வாரி விண்ணப்பதாரிகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

**ஏனைய நன்மைகள் :**

- வாழ்க்கைச் செலவுப் படி
- 12% EPF உரித்தாகும் மற்றும் நிறுவனத்தினால் 3% ETF பங்களிப்பு செய்யப்படும்.
- மருத்துவ விடுமுறைக்கான பணம் மற்றும் அரச சுற்றுநிருபத்தின் பிரகாரம் வருடாந்த போனஸ்
- மாதாந்த செயலாற்றுகை ஊக்குவிப்பு
- மருத்துவ மற்றும் ஆயுள் காப்புறுதி
- அரசாங்கத்தினால் அங்கீகரிக்கப்பட்ட ஏனைய நன்மைகள்

அரசாங்கத் திணைக்களங்கள், அரச கூட்டுத்தாபனங்கள் மற்றும் நியாயாதிக்க நிறுவனத்தில் பணியில் உள்ளவர்கள் தமது விண்ணப்பங்களை நிறுவனத் தலைவரின் ஊடாக அனுப்புதல் வேண்டும். இயைபுடைய சான்றிதழ்களின் பிரதிகள் மற்றும் முழுமையான சுய தரவுகள் அடங்கிய விண்ணப்பங்களை 2025 பெப்ரவரி 24ஆம் திகதி அல்லது அதற்கு முன் கீழே கையொப்பமிடப்பட்டவருக்குக் கிடைக்கும் வகையில் பதிவுத் தபாலில் அனுப்புதல் வேண்டும். தயவு செய்து கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் விண்ணப்பிக்கும் பதவியைக் குறிப்பிடுதல் வேண்டும்.

**பணிப்பாளர் நாயகம்,**
**தேசிய கட்டி ஆராய்ச்சி நிறுவனம்,**
**99/1, ஜாவத்த வீதி,**
**கொழும்பு 05.**